**சுருக்கம்**

பள்ளிக் கல்வி - தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025யை செயல்படுத்தும் விதமாக 2025-2026ஆம் கல்வியாண்டு முதல் மேல்நிலை முதலாம் ஆண்டிற்கான அரசுப் பொதுத் தேர்வினை இரத்து செய்தல் மற்றும் மதிப்பெண் சான்றிதழ் வழங்கும் முறையை மாற்றியமைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வித் (அ.தே) துறை**

அரசாணை (நிலை) எண். 228

நாள்: 09.10.2025
திருவள்ளுவராண்டு 2056
விசுவாவசு வருடம், புரட்டாசி 23

படிக்கப்பட்டவை :-

1. அரசாணை (நிலை) எண்.2415, கல்வித் துறை, நாள் 05.11.1976.
2. அரசாணை (நிலை) எண்.718, கல்வித் துறை, நாள் 07.05.1979.
3. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வித் (அதே1) துறை, நாள் 22.05.2017
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.04785/கே/இ3/2025, நாள் 15.09.2025

-------------

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு முழுவதும் பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வியில் 10+2+3 என்ற முறையினை நடைமுறைப்படுத்தி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மார்ச் 1980ல் முதல் முறையாக மாநில அளவில் மேல்நிலை இரண்டாம் ஆண்டிற்கான பொதுத் தேர்வினை நடத்திட ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2017-2018ஆம் கல்வியாண்டு முதல் (மார்ச் 2018) மேல்நிலை முதலாம் ஆண்டிற்கு பொதுத் தேர்வினை நடத்திட ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பள்ளிக் கல்வி இயக்குநர், மாணவர்களின் நலன் கருதியும், பொது தேர்வு தொடர்பான எவ்வித பதற்றங்களும் இல்லாமலும், மேல்நிலை கல்வியை உறுதியுடன் அவர்கள் கற்பதற்காகவும், தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025னை செயல்படுத்தும் விதமாக, 2025-2026ஆம் கல்வியாண்டு முதல், மேல்நிலை முதலாம் ஆண்டிற்கான அரசுப் பொதுத்தேர்வினை இரத்து செய்து ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5. தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025ஐ செயல்படுத்தும் விதமாக, கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது :-

i. 2025-2026ஆம் கல்வியாண்டு முதல் மேல்நிலை முதலாம் ஆண்டிற்கான அரசு பொதுத் தேர்வு இரத்து செய்யப்படுகிறது.

த.பி.பா

ii. 2025-2026ஆம் கல்வியாண்டு முதல் 11ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு 2017-2018ஆம் கல்வியாண்டிற்கு முன்னர் இருந்த நடைமுறையை பின்பற்றி தேர்வு நடத்திட அனுமதி வழங்கப்படுகிறது.

iii. 2025-2026ஆம் கல்வியாண்டில் இருந்து மேல்நிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழ் வழங்கும் முறையை மாற்றி, அவர்கள் பன்னிரண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வு எழுதிய பின்னர் பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்களை மட்டும் உள்ளடக்கிய மதிப்பெண் சான்றிதழ் வழங்கும் முறையை நடைமுறைப்படுத்த அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

iv. மேலும் ஏற்கனவே 11ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் தோல்வியுற்ற மாணவர்களுக்கு மட்டும் மேல்நிலை முதலாம் ஆண்டிற்கான அரசுப் பொதுத் தேர்வினை அடுத்த 5 ஆண்டுகளுக்கு அதாவது மார்ச் 2030 வரையில் தொடர்ந்து நடத்திட அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-600 006
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-600 006
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-600 006
தனியார் பள்ளிகள் இயக்குநர், சென்னை-600 006
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-600 006

நகல்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-600 009
பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர்
(ம) சீர்மரபினர் நலத் துறை, சென்னை-600 009
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சென்னை-600 009
உயர்கல்வித் துறை, சென்னை-600 009
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009
சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை, சென்னை-600 009
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-600 009
நிதித் துறை, சென்னை-600 009
இயக்குநர், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை-600 025
இயக்குநர், கல்லூரி கல்வி இயக்ககம், சென்னை-600 006
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009
பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை-600 009
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

9/10/25

பிரிவு அலுவலர் 1/20

9/10/25